# ஜப்பான் தூதரகம்

இல 20, கிரிகோரி வீதி, கொழும்பு-7, இலங்கை
தொலைபேசி: +94-11-2693831 ‘ 3 தொலைநகல்: +94-11-2698629
மின்னஞ்சல்: cultujpn@sltnet.lk

# வெளியீடு

2014 பிப்ரவரி 21

இலங்கை வடக்கு பகுதியில் ஒரு வாழ்வாதார திட்டம்

ஜப்பான் ரூ 70 மில்லியன் வழங்குகிறது

ஜப்பான் அரசாங்கத்தினால் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் மீள்குடியேறிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு உதவித் தொகையாக US$543,300 ( சுமார் ரூ 70 மில்லியன்) வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது, ஜப்பான் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நிதி உதவியில், ஜப்பான்-அரச சார்பற்ற நிறுவன ஒத்துழைப்பு உதவி திட்டத்தின் கீழ் வடக்கு மாகாணத்தில் மீள்குடியேறிய மக்களின் வாழ்வாதாரத்தினை முன்னேற்றும் முகமாக ஜப்பானிய அரச சார்பற்ற நிறுவனமான JEN மூலம் நிறைவேற்றப்படவுள்ளது.

இத்திட்டமானது ‘‘முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் மீள்குடியேறியவர்களிற்கான வாழ்வாதாரம் மற்றும் சமூக மேம்பாட்டு உதவி திட்டம்’’ என பெயரிடப்பட்டுள்ளதோடு இதன் மூலம் விவசாய கிணறு நிர்மானித்தல், தேவையான உபகரணங்கள் வழங்குதல் - நீர்பம்பிகள் வழங்கல், விவசாயத்திற்கான பயிற்சி பட்டறைகள் வழங்கல் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் நிறுவுவதற்காக உதவி செய்யப்படும். இத்திட்டம் நிலையான நீர் விநியோக வசதி, வாழ்வாதாரம் மற்றும் உணவு பாதுகாப்பை உறுதி செய்வதோடு நேரடியாக மற்றும் மறைமுகமாக சுமார் 240 குடும்பங்களின் வருமானத்தை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலக சமாதானத்தையும் சுபீட்சத்தையும் வகிக்கும் தன்னையே அர்பணித்து கொண்ட ஒரு நாடு என்ற முறையில் ஜப்பான், அமைதி

மற்றும் மீள்கட்டமைப்பு வளர்ச்சிக்கு நடுத்தர மற்றும் நீண்டகால பார்வையில் இலங்கையில் அது கவனம் செலுத்துகிறது. இந்த சூழலில் ஜப்பான், புனரமைப்புக்காகவும் மக்களின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்த வேண்டுமென முன்னுரிமை அளித்துள்ளது. மேலும் ஜப்பான் சமாதானம் மற்றும் நல்லினக்கம், இலங்கையின் நிலையான வளர்ச்சி, செழிப்புக்காக முன்தேவைகள் இருக்கும் என்று உறுதியாக நம்புவதால் சமாதான வழிமுறைக்காக முழு ஆதரவை வழங்கியுள்ளது.

JEN கொழும்பு காரியாலயத்தின் நிருவாகம் மற்றும் நிதி அதிகாரி திரு. நசூடா கூறியதாவது “JEN நிறுவனம் மோதல்கள், இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசர உதவி மற்றும் உலகம் முழுவதும் சுயமாக இயங்குவதற்கான உதவிகளை வழங்குவதற்காக 1994ம் ஆண்டு நிறுவப்பட்ட ஓர் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனமாகும். இலங்கையில் JEN 2004ம் ஆண்டு சுனாமிக்கு பின்னர் அதன் செயற்பாடுகளை ஆரம்பித்தது. இச்செயற்பாடுகள் முடிந்தவுடன் 2007ம் ஆண்டு முதல் கிழக்கில் ஏற்பட்ட மோதலால் பாதிக்கப்பட்ட மக்களிற்கும் 2009ம் ஆண்டு முதல் வடக்கில் அதன் உதவிகளை செய்ய கவனம் செலுத்தியது.

2014 பங்குனி 1ம் திகதி முதல் JEN “ முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் மீள்குடியேறியவர்களிற்கான வாழ்வாதாரம் மற்றும் சமூக மேம்பாட்டு உதவி திட்டம்” என்ற பெயரில் ஒரு வருட புதிய திட்டத்தினை ஆரம்பிக்கும்.

இதற்கான கிரான்ட் ஒப்பந்தம் 2014 பங்குனி 1ம் திகதி கொழும்பு தூதுவர் இல்லத்தில் வைத்து ஜப்பான் தூதுவர் அதிமேதகு திரு.நொபுகிடொ கொபோ அவர்களிற்கும் JEN , நிருவாகம் மற்றும் நிதி அதிகாரி திரு.டொமு நசூடா அவர்களிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது.

மேலும் தகவல்களிற்கு ஜப்பான் தூதரகத்தின் பொருளாதார ஒத்துழைப்பு பிரிவைத் தொடர்பு கொள்ளவும்.

தோ.பே. இல 01-269-3831-3(Ext.25)